# யாழ்.மாநகரசபை: 17 வட்டாரங்களில்மட்டுமே தேர்தல் நடக்கும்?

Registered as a Newspaper in Ceylon * * விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
இதழ் 41
போன் : 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி9 ஜுல்ஹஜ் 11 வியாழக்கிழமை [23-3-67]

யாழ்ப்பாணம், வியாழன்
மார்ட்டின் கமிஷன் அறிக்கைக்கு எதிராகச் செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தல் மீண்டும் 17 வட்டாரங்களுக்கு நடைபெறுமெனத் தெரிகிறது. மார்ட்டின் கமிஷன் அறிக்கைக்கு எதிராகச் செய்யப்பட்ட புகார்கள் சம்பந்தமாக அதில் உள்ள குறைபாடுகள்பற்றி விசாரணை நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

மார்ட்டின் கமிஷன் அறிக்கையில் தமிழரசுக் கட்சியினருக்கு ஆதரவாக வட்டாரங்கள் பிரிவினை செய்யப்பட்டதாக, யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் முன்னாள் மேயர், திரு. அல்பிரட் துரையப்பா, மாநகரசபை உறுப்பினர்களில் சிலரும் பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவிற்கும், ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கும், செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்தே மேற்கண்ட நடவடி

[6-ம் பக்கம் பார்க்க]

# இலங்கை நிபுணரின் புதிய உலக சாதனை

## தொலைபேசி ஒற்றுக்கேட்பதை தடைசெய்வதில் வெற்றி?

கொழும்பு, புதன்

**இலங்கை தந்தி, தொலைபேசி பொறியியலாளர் திரு. ரி. எச். எச். குணதிலகா புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார் தொலைபேசி ஒட்டுக்கேட்கும முறையைத் தடைசெய்வதில் இவர் புதிய முறையொன்றைக் கண்டுபிடித்திருப்பதே அவர் நிகழ்த்திய சாதனை.**

தொலைபேசி ஒட்டுக்கேட்பதைத் தடைசெய்வதில் பல நாடுகளிலும் நிபுணர்கள் முயற்சி மேற்கொண்ட போதிலும் இதில் எவரும் வெற்றிபெறவில்லை. முன்னேற்றமான நாடுகளில்கூட இத்திட்டம் தீவிர பரிசிலனைக்குள்ளான போதிலும் கைகூடவில்லை.

மேற்கு நாடுகளில் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட முறையின்படி தொலைபேசியில் ஒரு முனையிலிருந்து பேசுபவரின் உருவம் மறுமுனையிலிருப்பவருக்கு (தொலைபேசியில் பேசுபவருக்கு) தெரியக்கூடியதாக விருந்ததே தவிர இடையில் ஒட்டுக்கேட்பதைத் தடைசெய்ய அவர்களால் முடியவில்லை.

**கொழும்பில் நாளை வியாழக்கிழமை நடைபெறும் பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் திரு. குணதிலகா தாம் கண்டுபிடித்த புதிய முறை பற்றி விளக்குவார்.**

---

## நுவரேலியாவுக்கு பிரதமர் இன்று விஜயம்

### விவசாய நடவடிக்கைகளை நேரில் பார்வையிடுவார்

கொழும்பு, புதன்

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நாளை வியாழக்கிழமை நுவரேலியா மாவட்டத்துக்கு விஜயம் செய்து விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிடுவார்.

பிரதமரின் ''விவசாய சுற்றுப்பிரயாணத்தில்'' இது இரண்டாவது கட்டமாகும். முதலில் அவர் அனுராதபுரத்துக்குச் சென்றிருந்தார்.

பிரதமர் தமது நுவரேலியா சுற்று விஜயத்தின் போது அரசாங்க பண்ணைகளுக்கும் காய்கறி தோட்டங்களுக்கும் நேரில் செல்வார். தேசிய உணவு உற்பத்தியைத் தீவிரப்படுத்தும் நோக்கமாகவே அவர் மாவட்டங்கள் தோறும் சுற்றுவிஜயம் செய்துவருகிறார். நுவரேலியாவில் நான்கு நாள் தங்கியிருப்பார்.

---

பென்ஷன் பற்றி

## மலேசியப் பிரதமருடன் அமிர்தலிங்கம் பேசுவார்

யாழ்ப்பாணம், வியா.

இலங்கையிலுள்ளமலாயா பென்சனியர்கள் பெறும் பென்சனில் நடந்த வெட்டு சம்பந்தமாக. இலங்கைக்கு வரும் மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுடன் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விஷயமாக ஏற்கனவே

[6-ம்பக்கம் பார்க்க]

---

## சம்பளம் கிடைக்கவில்லை?

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் தொழிற்சந்தோரில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கு கடந்த மாதச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லையெனச் சொல்லப்படுகிறது.

சம்பளம் இன்றும் கொடுக்கப்படாத பட்சத்தில் இன்றுமுதல் வேலைக்குச் செல்வதில்லையென்று ஊழியர்கள் முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

## 'நடவடிக்கை எடுக்குக'

அச்சுவேலி, புதன்

அண்மையில் அச்சுவேலிச் சந்தியில் பொலிசார் பொதுமக்களை மிருகத்தனமாகத் தாக்கியது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அச்சுவேலிக் கிராமசபை பிரதம மந்திரியைக் கோரியுள்ளது.

நேற்று நடைபெற்ற கிராமசபையின் அவசரக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

ஓம்
விராட் விஸ்வப்பிரம்மணே நம

## ருது சோபன அழைப்பு

அன்புடையீர்!

**நிகழும் பராபவ ஸூ பங்குனி மீ 9 உ (23-3-67) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் வரும் சுபநேரத்தில்**

எமது சிரேஷ்டபுத்திரி திருநிறைசெல்வி

**இராசவதனி அம்மாளுக்கு**

ருதுமங்கள ஸ்நானஞ் செய்ய யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உறவினர்கள், நண்பர்கள் யாபேரும் இதனை அழைப்பாகக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

**தனிப்பட்ட அழைப்புகள் இல்லை**

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
சேனாதிராசா தம்பதிகள்
**சேனாதிராசா நகைமாளிகை,**
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

வரவேற்பாளர்கள்:
திரு. க. சி. பொன்னுத்துரைப்பத்தர்
திரு. சு. க. சேனாதிராசாப்பத்தர்
திருமதி நாகேஸ்வரி சேனாதிராசா

நீங்கள் கேளுங்கள்!

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

தான் வேண்டுமென்று!
ஈழவள நாட்டிலே
எங்குமே கிடைக்கும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு.''

—கிறிஸ்துநாதர்.

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹு பங்குனி மீ 9 உ (23-3-67)

## தி. மு. க. தூதுக்குழு

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்திருப்பது கண்டு இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டு மற்றும் சிலர் மத்தியில் தோன்றியுள்ள அச்சத்தையும் ஐயத்தையும் நீக்குமுகமாக இலங்கைக்கு ஒரு தூதுக்குழு சென்றுவருதல். நல்லதென்று தி. மு. க. பிரமுகர்களில் ஒருவரும் தமிழ்நாடு சட்டசபை அங்கத்தவருமான திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அருமையான, பயனுள்ள, வரவேற்கத்தக்க யோசனை கூறியிருக்கிறார்.

''நித்திரை செய்பவனை எழுப்பலாம், நித்திரை போல் பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியாது'' என்பது உண்மையே. திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிக்குவந்திருப்பதால் இலங்கைக்கும சிங்கள சமுதாயத்திற்கும் பேராபத்து வந்துள்ளதாகவும் இலங்கையிலுள்ள தமிழரும் தமிழ் அரசுக்கட்சியினரும் தி. மு. கழகத்தினருடன் சேர்ந்து 'இலங்கையைக் காட்டிக் கொடுத்து' விடுவார்களென்றும் சிங்கள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்துவருவோர் அரசியல் இலாபம் கருதியே அவ்வாறு செய்துவருகின்றனர். தங்கள் பீதிக்கும் தி. மு. க. வைக் கண்டு அஞ்சுவதற்கும் போதியகாரணமும் ஆதாரமும் இல்லை என்பது அவர்களுக்கே தெரியும். ஆனால் அவர்களின் தவறான பிரசாரத்தையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடில் சமூக உறவு கெட்டு நாட்டின் அமைதிக்குப் பங்கமேற்படலாம்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் நாம் அதற்கு இப்பத்தியில் வாழ்த்துத் தெரிவித்தபோது, இலங்கையில் தி. மு. க. பற்றிய தப்பெண்ணங்களை நீக்க தமிழ்நாடு அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் நட்புறவுகொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம்.

திரு. ஆசைத்தம்பியின் யோசனையை தமிழ்நாடு அரசாங்கம் சிந்தைக்கெடுத்து இலங்கைக்கு ஒரு நல்லெண்ணத் தூதுக்குழுவை அனுப்பி, இங்கு தவறான பிரசாரம் செய்யப்படுவதற்கு முற்றுப் புள்ளிவைக்க முயற்சி செய்வது நல்லது. இங்கு வருவதுமட்டுமல்ல, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட இங்கிருந்தும் ஒரு குழுவை தமிழ் நாட்டுக்கு அழைப்பது நல்லெண்ணமும் நட்புறவும் வளர உதவி புரியலாம்.

## நாட்டிலும் நகரிலும்

சென்னை மாகாணத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அபார வெற்றிபெற்றது, இலங்கையையும் தாக்கியது. தி. மு. க. பூச்சாண்டி காட்டிக்கொண்டு சிறிமாவோ தொண்டர்கள் உப-தேர்தல்களை வென்று கொண்டு வருகிறார்கள்.

சென்னையில் தி. மு. க. வெற்றிபெற்றதற்கும் இங்கே இலங்கையில் எதிர்க்கட்சியினர் உப-தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கும் என்ன சப்பந்தம் இருக்கிறது?

இது ஒரு பெரிய அரசியல் 'சுத்து மாத்து'.

தி. மு. க. ஆதியில் பிராமணரல்லாத சாதியினரின் உரிமைகளுக்காக எழுந்த ஒரு கட்சி. தென்னிந்தியாவிலுள்ள எண்பதுவீதம் பிராமணரல்லர்தார் நசுக்கப்பட்டுவருவதைத் தடுக்கும் நோக்கமாகவே முதலில் ஜஸ்டிஸ் கட்சியும், பின்னர் ஈ. வே. ராமசாமி நாயக்கரின் திராவிடக் கழகமும், அதன்பின் 'அண்ணு'வின் தி. மு. க.வும் தோன்றின.

தி. மு. க. ஒருகாலத்தில் கேரளம், தமிழ்நாடு, ஆந்திரம், கன்னடம் முதலிய தென் பிராந்தியங்களைக் கொண்ட ஒரு 'திராவிட நாடு' அமைக்கவேண்டுமென்ற லட்சியத்தைக் கொண்டிருந்தது உண்மைதான். அந்த லட்சியத்தைக் கைவிட்டுவிட்டோம் என்று 'அண்ணு'வே இப்பொழுது மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

## அரசியல் 'சுத்து மாத்து'

தி. மு. க. வடநாட்டவரின் ஆதிக்கத்தையும் முக்கியமாக ஹிந்தி மொழித் திணிப்பையும் எதிர்த்துவரும் கட்சி. தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும், தமிழை மேலே கொண்டுவரவேண்டும் என்பது தி. மு. க.வின் நோக்கம்.

இந்தத் தமிழ்ப்பற்றை இலங்கையில் உள்ளவர்கள் வேறுவிதமாக நினைத்துவிட்டார்கள். தி. மு. க. ஆட்சிக்கு வந்துவிட்டால் இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளை அது ஆக்கிரமித்துக் கொள்ளும் என்ற ஒரு விசித்திரமான நம்பிக்கை சிங்கள மக்களிடையே நிலவுகிறது.

இது வேறொன்றுமல்ல. சரித்திர காலங்களில் அடிக்கடி தென் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்புகளால் ஏற்பட்ட ஒரு மனப்பிராந்தியே இதற்குக் காரணம்.

ஒருசிறுகுழந்தைக்குசின்ன வயசில் 'பேய், பிசாசு, பூதம்' என்று பூச்சாண்டி காட்டி வந்தால் அது வயது வந்த பின்னரும் எப்படி அதே பயத்துக்கு அடிமையாகிறதோ, அது போலவே, சிங்கள மக்களிடையே இந்த 'தமிழ் படையெடுப்பு' சரித்திரகாலந் தொடக்கம் இருந்து வருகிறது.

எதிர்க்கட்சியினர் இந்த பூச்சாண்டியை மிகவும்லாவகமாகக்கையாண்டிருக்கிறார்கள்.

தென் இந்தியா இலங்கை மீது படையெடுத்து வருவதென்பது ஜனநாயகமும், ஐ. நா. சபையும் இருக்கும் இந்தக்காலத்தில் முடியவே முடியாத காரியம் என்பதை சிங்களத்தலைவர்கள்எல்லோரும் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள்.

இருந்தாலும், சாதாரண சிங்களமக்களிடையே ஆதிகாலம்தொட்டுஇருந்துவரும் இந்த தமிழ் பூச்சாண்டியை சிங்களத்தலைவர்கள் தங்கள் நன்மைக்காகப்பயன்படுத்துகிருர்கள்.

சென்னையைப்போன்றஒரு ராஜ்ய அரசாங்கத்திற்கு வெளி விவகாரங்களில்தலைப்போட உரிமையில்லை என்பதையும், இலங்கைமீதுபடையெடுப்பதாயிருந்தால் அதற்கு டில்லியிலுள்ள மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டும் என்பதையும் சிறிமா போன்ற தலைவர்கள் நன்ருக அறிந்திருந்தும், சிங்களப்பொதுமக்களின்வாக்குகளைப் பெறுவதற்காகஇந்த 'தி.மு.க. பூச்சாண்டி'யில் ஈடுபடுகிருர்கள்.

இந்திய தேர்தல் முடிவுகள்வெளிவந்தபோதுயாழ்ப்பாணத்தில் வெடிகொளுத்தியவர்கள் இங்குள்ள எம். ஜி.ஆர். விசிறிகளேயன்றி, தி.மு.க. ஆதரவாளர்கள் அல்ல என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

ஆயினும் தமிழர்கள் எல்லோரும் . தி.மு.க.வுக்காக வெடி கொளுத்தினுர்கள் என்று அரசியல் 'சுத்து மாத்து' செய்கிருர்கள்.

--வழிப்போக்கன்

## இப்பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்கும்

சுழிபுரம், புதன்

தொல்புரம், மூளாய், பொன்னுலை ஆகிய இடங்களுக்கு மின்சார இலாகாவினரால் மின்சாரம் வழங்கப்பட விருக்கின்றன. மின்சார இலாகா உத்தியோகஸ்த்தர்கள் தொல்புரம் மூளாய் பொன்னுலை ஆகிய இடங்களை நேற்று பார்வையிட்டுச் சென்றனர். திரு. அ. தையல்பாகர் ஜே. பி. மாதிரி அமைப்பு வேலைகளையும் மற்றும் புள்ளி விபரங்களையும் மின்சார பகுதி பிரதம உத்தியோகஸ்தருக்கு சுழிபுரம் கிராமசபை அலுவலகத்தில் வைத்து விளக்கினர். பின்னர் மின்சாரம் கொடுக்கும் இடங்களை பார்வையிட்டு நேர்முகமாக புள்ளி விபரம் சேகரித்தனர்.

## குடி நீர்வசதியற்ற பாடசாலை

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய் அரசினர் பாடசாலை பெற்ருர் ஆசிரியர்சங்கக் கூட்டம் மேற்படி பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. இ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டன.

பாடசாலைப்பிள்ளைகள் இதுகாலவரை பாவித்துவந்த அயலவர் கிணற்றைத் தொடர்ந்து தண்ணீர் வசதி அளிக்கமுடியாது மறுத்துவிட்டமையால் உடனடியாகப் பாடசாலை வளவில் ஒரு கிணற்றை வெட்டவேண்டும்.

தோட்டம் செய்வதற்குப் போதிய நிலம் இருப்பதால் அந்நிலத்தைப் பயன்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும். பாடசாலை முன்னேற்றத்திற்குப் பெற்ருேர்களிடமிருந்து நிதி திரட்டப்படவேண்டும்.

பாடசாலைக்குப் பிள்ளைகள்வரவு கூடுவதால்மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

## இந்தியவிவசாயத்திற்கு ரஷ்ய உதவி

லுதியானு, மார்ச் 22

பாரத விவசாய அபிவிருத்திக்கு உதவுமுகமாக சோவியத் ரஷ்யா டிராக்டர்கள், மற்றும் விவசாய எந்திர உபகரணங்களை விரைவில் அளிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் ஐந்து புதிய தோட்டங்களுக்கு உதவியளிக்கவே இவை அனுப்பப்படும்.

இத்தகவலைத் தற்போது பாரதத்தில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய விவசாய நிபுணர் குழுவின் தலைவரான சோவியத் உதவி விவசாய மந்திரி, லுதியானுவிற்கு விஜயம் செய்தபோது குறிப்பிட்டார்.

## கணபதீஸ்வரக் குருக்கள்

அவனருளாலே அவன் தாள் வணங்கி அல்லும் பகலும் அரண் பணிபுரிந்து, அன்மையில் அவன்தாள் அடைந்தவர் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள்.

'இறைமலி நகர்' எனப் பல்லோராலும் போற்றப்படும் காஞ்சிபுரம், அறநெறி தழைக்க இறை பணி ஓம்பும் அந்தணர்கள் நிறைந்த திருப்பதி. இவ்வந்தணர்களுள், ஒழுக்கத்தால் மேம்பட்ட சில குடும்பத்தினர், இராமநாதபுர மன்னர் சோமசுந்தர சேதுபதி மகாராஜாவின் வேண்டுகோளின்படி திருவுத்தரகோசமங்கைக்கு வந்து அங்குள்ள ஆலயத்திற் சந்ததி சந்ததியாகப் பூசைசெய்து வரலாயினர். பல்லாண்டுகளின் பின்னர், இங்கே வைசூரி நோயும், கலகமும் ஏற்படவே, இவர்கள் திருவுத்தரகோசமங்கையை விட்டு நீங்கி, இராமேஸ்வரம் வந்தார்கள்.

ஈழத்துத் தமிழ் மன்னனுகிய குளக்கோட்டு மகாராஜா காரைநகரிலுள்ள வியாவில் என்னுமிடத்தில் ஏழு நிலைக் கோபுரமுடைய ஐயனுர்கோவிலைக்கட்டினுர். இக்கோவிலிற் பூசை செய்வதற்கு, அறிவும் ஆற்றலும் தகுதியும் தண்ணளியும் நிறைந்த குருக்கள்மாரை அழைத்துவரும்படி தன் நண்பராகிய முத்துமாணிக்கம் செட்டியார் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பினுர். உத்தரகோசமங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்திருந்த ஒரு குருக்கள் குடும்பத்தினர், செட்டியாரின் அழைப்பின் பேரில் ஈழநாட்டுக்கு வந்து வியாவில் ஐயனுர் கோவிலின் பூசைப் பொறுப்பை ஏற்றனர். கி. பி. 1505-ம் ஆண்டில் போத்துக்கீசர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

போத்துக்கீசர், தம் இந்து மத எதிர்ப்புக் கொள்கையினுல், வியாவில் ஐயனுர் கோவிலை இடித்துச் சேதப்படுத்தினர். அன்னிய ஆட்சியாளரின் அட்டூழியங்களைச் சகிக்கமுடியாமல், அக்காலத்திலிருந்த குருக்கள்மார் ஐயனுர் கோவிலைவிட்டுநீங்கி மணற்காட்டு மாரியம்மன் கோவிலுக்கு வந்தனர். பழம் பெருமை மிக்க இக்குருக்கள் பரம்பரையிலே தோன்றியவர்தான் சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள்.



இவர்10-3-1888-ல்சிவஸ்ரீ சரவணபவக் குருக்கள்-திருவேங்கடம்மா ஆகியோரின் புத்திரராகப் பிறந்தார். ஆரம்பத் தமிழ்க் கல்வியை காரைநகர் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் திரு. அருணுசல உபாத்தியாயர், திரு. நாகமுத்து உபாத்தியாயர் ஆகியோரிடம் கற்ருர். [யாழ்ப்பாணத்திலே ஒரு சைவாசிரியகலாசாலை உதயமாவதற்கு மூலபுருஷராக இருந்தவர். இந்த அருணுசல உபாத்தியாயர் அவர்களே.] காரைநகரை சேர்ந்த ஸ்ரீ இ. முருகேச ஐயர் என்பவரிடம் சம்ஸ்கிருதம் பயின்ருர். பின்னர் துணைவி அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணுசல சாஸ்திரிகள், கந்தரோடை வைத்தியநாத சாஸ்திரிகள் ஆகியோரிடம் சம்ஸ்கிருதம் கற்றுவிட்டு அல்வாய் இராமலிங்கக் குருக்கள் [மாப்பிள்ளைக்குருக்கள்] அவர்களிடம் குருகுல முறையில், சைவசமயக் கிரியா விஷயங்களைத் துறைபோகக்கற்ருர்.

ஒவ்வொரு நாளும் சிவபூசையும் ஆலய வழிபாடும் செய்துமுடித்த பின்னரே உணவு உட்கொள்ளும் வழக்கம் உடையவர் இவர். கோவிற்பணிக்கென ஆலயக் கதவுகளைத்திறந்துகொண்டு உள்ளே சென்ருர் என்ருல், அப்பணிகளை ஒழுங்காகவும் வேத, ஆகம, நெறிப்படியும் செய்து நிறைவேற்றும்வரை உணவோ, நீராகாரமோ எதுவும் உட்கொள்ளாது சுறுசுறுப்புடன் இயங்குவார் இவர் ஆசார சீலர், அறவொழுக்கமுடையவர், நேர்மையானவர். ஆயிரந்தான் தொல்லைகள் வந்தாலும் தம் கொள்கையினின்று சிறிதும் தவறமாட்டார்.

தன் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் ஈழத்துச் சிதம்பரேஸ்வரனுக்கு அர்ப்பணித்த பெரியார் இவர். இத்தேவஸ்தானத்திலே தொடர்ச்சியாக 64 ஆண்டுகள்சேவைசெய்த பெரும் பேறு வாய்க்கப் பெற்றவர் இவர்.

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் வடக்கு ரத வீதியிலமைந்த ஸ்ரீ கணபதீசுவரக் குருக்களவர்களின் இல்லம் ஒரு சமயச் சர்வகலாசாலையைப் போன்றே விளங்கியதெனலாம். ஆயிரக்கணக்கான ரூபா மதிப்புடைய ஏடுகள், பத்ததிகள்' தமிழ், சம்ஸ்கிருத நூல்கள் இங்குள்ளன. மற்றையோரிடம் இல்லாத பல அபூர்வ ஏடுகள் இவரிடமுள்ளன. இக்காலத்தில் அச்சுவாகனம் ஏறிய நூல்கள் பல குருக்களவர்களிடம் ஏட்டுருவிலேயே இருக்கின்றனவென்ருல், அவற்றின் தொன்மையை ஒருவாறு ஊகிக்கலாமன்ருே?

'ஈழத்துச் சிதம்பரம்' என்ற பெயரில் குருக்களவர்கள் எழுதிய நூல் சமய, வரலாற்றுப்பிரியர்களுக்குப் பெருவிருந்தாயமைந்துள்ளது. ஈழத் தமிழர்களின் வரலாற்றை அறிய விரும்புவோர்க்குப் பல முக்கியமான செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அல்லும் பகலும் ஈழத்துச் சிதம்பரேஸ்வரரின் திருவடிகளையே எண்ணிய ஸ்ரீ கணபதீசுவரக் குருக்களவர்கள் 1967-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ந் திகதி பிற்கல் 3 மணியளவில் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

-- ஓர் அன்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோ சி மின்னுக்கு ஜோன்ஸன் கடிதம் எழுதியது உண்மையே

## அமெரிக்க ராஜாங்க இலாகா தெரிவிக்கும் தகவல்

வாஷிங்டன், மார்ச் 22

**அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன், வடவியட்னும் ஜனதிபதி திரு. ஹோசிமிடனுன் கடிதப்பரிமாறல் செய்ததாக அமெரிக்க ராஜாங்க இலாகா ஒப்புக்கொண்டுள்ளது.**

வியட்னுமில் சமாதானம்காணும் நோக்கத்துடன் சென்ற மாதம் வடவியட்னும் ஜனதிபதிக்கு அமெரிக்க ஜனதிபதி எழுதிய கடிதம் பற்றியும், அதற்கு வடவியட்னும் ஜனதிபதி அனுப்பிய பதில் பற்றியும் முதற் தடவையாக வடவியட்னும் பத்திரிகைகளே குறிப்பிட்டன. இதை இப்போது அமெரிக்க ராஜாங்க இலாகாவும் உண்மையென ஏற்றுக் கொண்டுள்ளது.

ஹோசிமினுக்கு ஜோன்ஸன் எழுதிய கடிதத்தில், வடவியட்னும் தென்வியட்னுமுக்குள் ஊடுருவல் செய்வதை நிறுத்தினுல், அமெரிக்கா வடவியட்னும்மீதான குண்டு வீச்சை நிறுத்துவதுடன், தென்வியட்னுமிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களையும் பெருமளவில் குறைத்துக்கொள்ளுமெனத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஹோசிமின், அமெரிக்கா வடவியட்னும்மீதான தனது குண்டுவீச்சை நிபந்தனை எதுவுமின்றி நிறுத்துவதே, வியட்னுமில் சமாதானம் காண்பதற்கான முதல்நடவடிக்கையாகுமென அறிவித்துள்ளார். அப்படி நிறுத்தும் பட்சத்தில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிலும் வடவியட்னும் பங்கு பற்றமுடியுமென ஹோசிமின் தமது பதிலில் வலியுறுத்தியுள்ளார்.

இருஜனதிபதிகளுக் கிடையேயுமான இக்கடிதப்பரிமாறல் வாஷிங்டனில் நடைபெற்றதாக, அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்துள்ளது.

### நல்ல முயற்சி

வியட்னுமில் சமாதானம்காண்பதற்கு அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் மேற்கொண்ட இம்முயற்சி, வியட்னுமில் போரை விஸ்தரிக்கும் கொள்கையையே அவர் பின்பற்றுகிறுர் என்ற அவரது விமர்சகர்கள் கருத்தை ஓரளவுமாற்றுமென எதிர்பார்க்கப்படுவதாக வாஷிங்டனில் அபிப்பிராயம் நிலவுகிறது.

இதற்கிடையே குவாமில் நடைபெற்ற வியட்னும்சமாதான மாநாட்டிலிருந்து அமெரிக்க ஜனதிபதிஜோன்ஸன் இன்று வாஷிங்டன் திரும்பினுர். இம்மாநாட்டில் ஜனதிபதிஜோன்ஸனும் தென்வியட்னும் ஜனதிபதியும், பிரதமரும், அமெரிக்க வெளிஉறவு மந்திரி திரு. டீன் ரஸ்கும், பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாராவும் கலந்து கொண்டனர். மாநாடு பற்றி வாஷிங்டனில் வந்திறங்கிய ஜனதிபதி பத்திரிகையாளரிடம் குறிப்பிடுகையில், 'வியட்னுமில் கௌரவமான சமாதானத்தை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட ஒருமுயற்சி இது' என்றுர்.

### யுதாண்டின் புதிய திட்டம்

வியட்னும் சமாதான முயற்சியில்புதியமூன்று அம்சத்திட்டமொன்றை ஐ.நா. பொதுக்காரியதரிசி திரு. யுதாண்ட் வெளியிட்டுள்ளார். இத்திட்டத்தைத் தனது அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக தென் வியட்னும் பிரதமர் ஏர்மார்ஷல் கா கீ தெரிவித்துள்ளார்.

யுதாண்டின் புதிய 3 அம்சத் திட்டத்தில், முதலாவதாக அமெரிக்கா, வடவியட்னும் மீதான குண்டு வீச்சை நிறுத்தவேண்டும் என்றும், இரண்டாவதாக, இருதரப்பினரதும் போர் நடவடிக்கைகள் குறைக்கப்படவேண்டுமென்றும், மூன்றுவதாக, வியட்காங்கியர் உட்படப் போரில் சம்பந்தப்பட்ட சகல கட்சியினரும் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சியரா லியோனில் இராணுவ ஆட்சி

## கவர்னர் ஜெனரலும் பிரதமரும் கைது

பிரீட்வுண், மார்ச் 22

**சியரா லியோனில், இராணுவத் தளபதி 'மார்ஷல் சட்டம்' பிறப்பித்துள்ளார். கவர்னர் ஜெனரலையும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் திரு. ஸ்டீவென்சையும் வீட்டுத் தடுப்புக் காவலில் வைத்துள்ளார்.**

சியரா லியோனைக் குடியரசாக்குவது என்ற உறுதிமொழியுடன் அங்கு நடைபெற்று முடிந்த தேர்தலில் ஆளுங்கட்சி போட்டியிட்டது. ஆளும் கட்சிக்கும் திரு. ஸ்டீவென்சின் கட்சிக்கும் சரிசம பலம் கிடைத்தது. இந்த நிலையில், திரு. ஸ்டீவென்சை நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்கும்படி கவர்னர் ஜெனரல் அழைத்தது, அரசியற் சாசனத்துக்கு விரோதமான செயலென இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

சியரா லியோன் தேசிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், கடுமையான இராணுவ காவலின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

# மனித குலம் அனைத்தும் ஓரே குடும்பமே

## யுதாண்ட் செய்தி

நியுயோர்க், மார்ச் 22

''மனிதகுலம் அனைத்தும் ஒரே குடும்பமே'' என்றுஐக்கியநாடுகள் தலைமைக்காரியதரிசி யு தாண்ட் ''இனவேற்றுமைஅகற்றும்தினம்'' குறித்து விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

இத்தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை வருடந்தோறும் மார்ச்மாதம் இருபத்தோராம்திகதி அனுஷ்டிப்பதென்று கடந்த அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மகாசபை தீர்மானித்திருந்தது.

இதேநாடுகளில் தென்னுபிரிக்காவின் ஒரு பகுதியில் நிறவெறியை எதிர்த்து அமைதியாக ஊர்வலம் நடத்திய நிரபராதிகள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டு 68 பேர் பலியானுர்கள்.

யுதாண்ட் தமது செய்தியில், இனவெறுப்பு அநீதியானது மட்டுமல்ல பயங்கர விளைவுகளைத் தோற்றுவிக்கவும்கூடியதுஎன்றுதெரிவித்துள்ளார்.

# ஹரியானு மந்திரிசபை ராஜினுமா செய்தது

## எதிர்க்கட்சிகள் அளிக்கும் எட்டு அம்சத்திட்டம்

சண்டிகார், மார்ச் 22

ஹரியானு முதன்மந்திரி திரு. பகவத் தயாள் சர்மா நேற்றுத் தனது காங்கிரஸ் மந்திரிசபையின் ராஜினுமாவை அறிவித்தார். காங்கிரஸ் கட்சியிலிருந்து 13 பேர் திடீர் ராஜினுமாச் செய்ததைத் தொடர்ந்து, காங்கிரஸின் பெரும்பான்மைப் பலம் ஹரியானு சட்டசபையில் குறைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரும், காங்கிரஸிலிருந்து ராஜினுமாச்செய்த 13 பேருமாகத் தற்போது ஹரியானு சட்டசபையில் மொத்தம் 81 அங்கத்தவர்களில் 44 ஆகத்தாம் விளங்குவதாக எதிர்க்கட்சி இணைப்புக்குழு ஒன்று ஹரியானு கவர்னரிடம் கூறி, அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளது.

எதிர்க்கட்சி இணைப்புக் குழு, ராஜ்யத்தில்நல்லாட்சி நிறுவும் முகமாக எட்டு அம்சத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. அப்பழுக்கற்ற நிர்வாகம், ஏழைகளுக்கு வரி நிவாரணம், பின்தங்கிய வகுப்பினரின் நிலையை உயர்த்தல், விலைவாசிகளைக் குறைத்தல். உணவு உற்பத்தியைப் பெருக்குதல், கைத்தொழில் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல் ஆகிய அம்சங்கள் இத்திட்டத்தில்இடம்பெறுகின்றன.

### பிரேஸிலில் கடும் புயல்

#### 400 பேர் இறந்தனர்

சாபோலோ, மார்ச் 22

பிரேஸிலில் ரியோ டி ஜெனேரோவுக்கும் சாபோலாவுக்கு மிடையேயுள்ள கடலோரப் பிரதேசத்தில் நேற்று ஏற்பட்ட கடும் புயலும், மழையும் காரணமாக 400 க்கும் மேற்பட்டோர் இறந்தனர். 500 க்குமதிகமானேர் காயமுற்றனர். 30,000 பேர் [illegible]ந்தனர்.

### கையெழுத்து சேகரிப்பு

யாழ்ப்பாணம். வியா.

மல்லி, மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் தட்டுப்பாடு நிலவிவருவதை அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டும் பொருட்டு, யாழ்ப்பாணத்தில் கையெழுத்து வேட்டை நடக்கிறது.

சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றின் யாழ். பிராந்திய இளைஞர்கள் இக்கையெழுத்து வேட்டையை ஆரம்பித்திருக்கின்றனர்.

இக்கையெழுத்து வேட்டை முதலில் யாழ்ப்பாண நகரத்தில் ஆரம்பமாகிப் பின் மற்றும் தொகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

இதில் யாழ்ப்பாணத்தில் சுமார் ஒரு லட்சம் மக்களின் கையெழுத்தைப்பெற இக்கட்சிகள் முயற்சிசெய்து வருகின்றது. வீடு வீடாகச் சென்று கையெழுத்து வேட்டையாடும் இயக்கத்தில் பெண்களும் கலந்துகொள்[illegible] கிறது.

# காஷ்மீரில்பாகிஸ்தான் உளவு கோஷ்டி

## முறியடிக்கப்பட்டது

ஸ்ரீநகர், மார்ச் 22

பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரால் காஷ்மீரின் வடபகுதியில் உருவாக்கப்பட்ட உளவாளர், நாசகாரர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளதாக ராஜாங்க சி. ஐ. டி. நேற்று இங்கு அறிவித்தது.

காஷ்மீரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் குழப்பம் உண்டாக்கவும், முக்கியமான அரசியல் தலைவர்களைக் கொலைசெய்யவும் இக்கோஷ்டி திட்டம்வகுத்திருந்ததாக அறியப்படுகிறது.

அத்துடன், முதல் மந்திரி திரு. ஜி. எம். சாதிக், காங்கிரஸ் அக்கிராசனர் திரு. செய்யதுமேர் காசிம் ஆகியோர் பேசும் கூட்டங்களில் கைக்குண்டுகள் வீசுவதற்கும், அவர்கள் பிரயாணம் செய்யும் பாதைகளுக்கு வெடிவைப்பதற்கும் அக்கோஷ்டி திட்டமிட்டிருந்ததாம்.

### கைத்தொழிலதிபர் ஞானத்துக்கு அமெரிக்க பத்திரிகை பாராட்டு

கொழும்பு, புதன்

ஆசிய, பசிபிக் பொருளாதாரம் பற்றிய, தனது விசேஷ அனுபந்தமொன்றில், அமெரிக்க பத்திரிகையான 'நியூயோர்க் டைம்ஸ் இன்டெர்நாஷெனல்' இலங்கை வர்த்தகர் ஒருவரைப் பற்றி, அவரது புகைப்படத்துடனும். வாழ்க்கைக்குறிப்புடனும் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. சிறிய அளவில் தொடங்கி பெரிய வர்த்தகர்களான வரிசையில் கோடி டொலர் வர்த்தக நிறுவனமான மிற்சூ அண்ட் கம்பனியின் தலைவரான திரு. டற்சூ ஸோ மிசுக் காமியுடன் இடம்பெறும் இவ்வர்த்தகர் திரு. சாமுவேல் ஞானமாகும்.

'சாமுவேல் ஞானம்' என்ற தலைப்பில் 'டைம்ஸ்' அவ

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு கொலைவழக்கு

யாழ்ப்பாணம், வியா.

மண்டைதீவு கொலைவழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பதில் நீதிபதி திரு. வின்சன்ற் பீரிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பொலிஸார் குற்றப்பத்திரிகைதாக்கல் செய்தனர்.

இவ்வழக்கில் மண்டதீவில் பாலசிங்கம், குலசிங்கநாதன், சிவபாதசுந்தரம், தருமு ஆகிய நால்வரும், சாம்பமூர்த்தி என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதனும், 2ம், 3ம் எதிரிகள் சார்பில் புறக்டர் ஆர். விசுவநாதனும் ஆஜரானார்கள்.

2ம் எதிரி சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியிலிருப்பாதகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிபதி விசாரணையை ஏப்ரல்மாதம் 4ந்தேதிவரை ஒத்திவைத்தார்.

## ஏப்ரல் முழுவதும் விடுதலைவேண்டும்

புன்னாலைக்கட்டுவன், வியாழன்

ஏப்ரல் மாதம் வெப்பமும் புழுக்கமுமாக இருப்பதால் அம்மாதம் முழுவதும் விடுதலை காலமாக அங்கீகரிக்கப் படவேண்டுமென்று இப்பகுதியிலுள்ள சில பாடசாலை அதிபர்கள் வடமாநில வித்தியாதிபதியிடம் கோரியுள்ளனர். இதனால் இழக்கப்படவிருக்கும் பாடசாலை வேலை நாட்களை அடுத்த தவணையுடன் சேர்க்கலாமென்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### பஸ்சேவை பற்றிப் புகார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்திலிருந்து கேரைதீவு, கச்சாய், கொடிகாமம் ஆகிய இடங்களுக்கு நாவற்குழி, தச்சன்தோப்புக்கூடாகச் செல்லும் இ.போ. ச. பஸ்களை சரியான புதியநேர சூசிகையின்படி அனுப்புமாறு இப்பகுதிப் பிரயாணிகள், வடபிரதேச இ.போ.ச. முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விரு பஸ்களும் காலையிலும் மாலையிலும் ஒன்றின்பின்ஒன்றாக 10 நிமிட இடைவேளையில் செல்வதால் இப்பகுதி பாடசாலை மாணவர்களும், அரசாங்கஊழியர்களும், சிகிச்சைபெறவிருக்கும் நோயாளர்களும் மிகவும் அவகியுறுவதாகக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

[ந. நி.]

### பாடசாலை குறைபாடுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

தென் மராட்சியிலுள்ள பாடசாலைகளில் நிலவிவரும் குறைபாடுகள் பற்றி அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர்சங்கதென்மராட்சிக்கிளை அடுத்தவாரம் வடபிரதேசக் கல்வி வித்தியாதிபதியை பேட்டிகாணவிருக்கிறது.

பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை உடனே தெரிவிக்குமாறு சங்கச்செயலாளர் திரு. செ. சிவப்பிரகாசம் தென்மராட்சியிலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் வேண்டுகோள். விடுத்துள்ளார்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின், தமிழ் பாடசாலைகளும், மகாவித்தியாலயங்களும் எவ்வித முன்னேற்றமும் அடையாதிருப்பதாக பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் பலதடவை கல்விப்பகுதிக்கு முறையிட்டும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லைஎனசங்கச் செயலாளர் தெரிவித்தார்.

சிலபாடசாலைகளில் மேலதிகமாகவும், சிலபாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை இருப்பதாகவும், அவர் தெரிவித்து, இக்குறையை நீக்கக் கல்விப் பகுதி முன்வரவேண்டும் என்றுகூறினர்.

### பிரயாணிகள்கஷ்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை போக்குவரத்துச்சபை டிக்கட் பரிசோதகர்களில் சிலர் பஸ்ஸை பல மணிநேரம் ஒரே இடத்தில் நிறுத்தி டிக்கட் பரிசோதனை செய்வதால், பிரயாணிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகி வருவதாகஅறியப்படுகிறது.

பஸ் ஓடிக்கொண்டிருக்கும் போதுதான் டிக்கட் பரிசோதனை செய்வது வழக்கமாக இருந்துவந்தபோதிலும், சில டிககட் பரிசோதகர்கள் பஸ்ஸை ஒரே இடத்தில் நிறுத்திவைத்து பரிசோதனை நடத்துவதாகவும், இதனால் காரியாலயங்களுக்கும், ஆஸ்பத்திரிக்கும் செல்லும் பிரயாணிகள் பாதிக்கப்படுவதாகவும், அத்துடன் பஸ்கள் நேரசூசிகைப்படிசேவை செய்யமுடியாமலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடித்துக் கொலை செய்ததாக வழக்கு

மாவிட்டபுரம், புதன்

பழை வீமன்காமத்தைச் சேர்ந்தவர்களான செல்லையா விஜயரத்தினம் [17 வயது], செல்லையா கந்தசாமி [26 வயது], தம்பிப்பிள்ளை கமலநாதன் [13 வயது] ஆகிய மூவரும், சென்ற மாதம் 23ந் தேதி அதேயிடத்தைச் சேர்ந்த முத்தையா விமலச்சந்திரன் [26 வயது] என்பவரை அடித்துக் கொலைசெய்ததாகக் காங்கேசன்துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் செல்வி சரோஜினி செல்வரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

''காலஞ் சென்றவரைச் சென்ற மாதம் 23ந் தேதி இரவு 8-30 மணிக்கு, காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் வைத்துப் பரிசோதித்தேன். அவருடைய உடலில் ஏழு காயங்கள் காணப்பட்டன. அவர் அன்றிரவு 11-30க்குக் காலமாகிவிட்டார். அவருடைய தலையில் ஏற்பட்ட அடிகாயத்தினாலேயே அவர் இறந்தார்.

முதலாம் எதிரியையும் அன்றிரவு பரிசோதித்தேன். அவருடைய உடம்பிலும் 3 காயங்கள் காணப்பட்டன. இக்காயங்கள் இழுபறிப்பட்டமையால் ஏற்பட்டிருக்கலாம்.''

யாழ்ப்பாண சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார். நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 27ந் தேதிக்கு ஒத்திவைத்து அத்தேதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. ஆ. ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. உலகநாதன், ரி. தம்பிரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடனும், திரு. டபிள்யூ. அரசுவால்டனின் உதவியுடனும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜரானர்.

### 'இப்போதைக்கு போட்டியிடமாட்டேன்' பட்டீல் அறிவிப்பு

பம்பாய், மார்ச் 22

பார்லிமெண்டரி உபதேர்தல் எதிலும் இப்போதைக்குத் தாம் போட்டியிடப் போவதில்லையென்று முன்னாள் யூனியன் மந்திரி திரு. எஸ். கே. பட்டீல், இங்குதான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

திரிபுரா, மார்ச் 22

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இரண்டாயிரத்துக்கதிகமான மக்கள் திரிபுராவுக்கு வெளியேறி வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### சுகர்ணோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, மார்ச் 22

இந்தோனேஷிய முன்னாள் ஜனாதிபதி சுகர்ணோவை விசாரணை செய்யும்படி ஆயிரக்கணக்கான மக்கள்நேற்று இங்கு ஆர்ப்பாட்டம் செய்தனர்.




# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனால் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

ரெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

3x14"

J.W.T.R.C.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கட்டைவேலி கிராமசபை விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1967-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் இரண்டு மணி வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் பங்குனி மாதம் 30-ம் திகதி பகல் 12 மணிவரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் யாவும் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்:

1. நாவலடி இம்புலிட்டிப் பிள்ளையார் கோவில் திக்கம் ரோட்டு.
2. ஓடை வைரவர் தேவரையாழி இந்துக் கல்லூரி ரோட்டு.
3. வட்டுவத்தை ரோட்டு.
4. குடவத்தை சுடலையில் மடம்.
5. குடவத்தை சுடலையில் மையம் சுடும் மேடை.

[ஒப்பம்]
எஸ். சி.மாணிக்கவாசகர்,
நிர்வாகஸ்தர்,
கட்டைவேலிக் கிராமப் பகுதி.
நிர்வாகஸ்தர் காரியாலயம்,
கட்டைவேலிக் கிராமசபை,
அல்வாய்.
14-3-67. 2499

கோண்டாவில்,புதன்
இணுவில் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் சங்கானை மாலியவத்தை விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இணுவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் விவேகானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

## டைம் கிறீம்

உலகப் பிரசித்திபெற்றது. இரம்மியமானது. இது, இல்லறவாழ்க்கையில் பூரண திருப்தி அளிப்பது. புகழ் வாய்ந்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களால் உயர்தர ரசாயன மருத்துவ சாலையில் தயாரிக்கப்பட்டது. முழு விபரங்களுக்கும் எமக்கு எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பப்படும்.

விலை ரூ. 5/-
தபால் செலவு சதம்-/25

**மெட்ரோ ஏஜென்ஸி**
235 1/1, நொறிஸ்ரோட்,
கொழும்பு -11.

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மல்லாகம் இந்து சாம்பியன்கள்

### வடமாகாண உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.
வட மாகாண கல்விப் பகுதியினரால் நடாத்தப்பட்ட வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் தொடர்ந்து இரு நாட்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 45 பாடசாலைகள் வரை பங்குபற்றிய இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் மல்லாகம் இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் சாம்பியன் வெள்ளிக் கிண்ணங்களைத் தட்டிக் கொண்டன.

வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரெத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்கினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகள் பின்வருமாறு:

**ஆண்கள் மேற்பிரிவு**

மல்லாகம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

**மத்திய பிரிவு**

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

**கீழ்ப்பிரிவு**

மல்லாகம் இந்துக் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்ரியன் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

### பெண்கள் போட்டி

**மேற்பிரிவு**

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி. பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி.

**மத்திய பிரிவு**

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

**கீழ்ப் பிரிவு**

வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி.

### கைத்தொழிலதிபர் .....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ரைப்பற்றிக் கூறியுள்ளதாவது: கிராமப் பள்ளிக் கூடத்தைவிட்டு 10-வது வயதில் விலகிய வர்த்தக மேதை, இலங்கையின் 'இரும்புமனிதன்' — இப்பட்டம் அவருடைய வியாபாரத்தை மட்டுமன்றி, அவரது குணத்தையும் குறிக்கும் .... இரும்பு ஆணிகள் தொடக்கம் பாரமான இரும்புக்குழாய் பொருத்துகள் வரை உற்பத்தி செய்யும் இரும்புத் தொழிற்சாலைக்குச் சொந்தமானவர் .... கொழும்பு சேரிக்கடைகளில் கறி,பிறகு இரும்புக் கழிவுப்பொருள், பழைய போத்தல் ஆகியவற்றை விற்க ஆரம்பித்து, வர்த்தகஉலகில் கல்வி பயின்றவர் ... துணிஉற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டுமென்ற அரசாங்க இலட்சியத்தில், திரு. ஞானத்தின் முயற்சிகள் நாட்டின் பொருளாரத்தின்மீது முக்கிய பாதிப்பு உள்ளதாகும். தனக்குக்கீழுள்ள ஜப்பானிய நிபுணர்களுடன், இந்த 44 வயது கைத்தொழில் அதிபதி, காலக்கிரமத்தில் 1,500 பேரை வேலைக்கமர்த்தி, நாட்டுத் தேவையில் 10 சதவீதத்தைப் பூர்த்தி செய்யும் வகையில், 2கோடியார் துணியை உற்பத்தி செய்வார் ..... அபிவிருத்தியுடன் பரிச்சயமுறப் பிரயாணம் அடிக்கடி மேற்கொள்பவர் ... கொழும்பில், குடியிருப்பாளர் பகுதியின் மத்தியில், வசதியான பங்களாவில் மனைவியுடன் வசிக்கிறார் ... மூன்று மகன்கள், மூன்று மகள்கள் ... வர்த்தக வெற்றி குறித்து, 'கடவுளும், கடும் உழைப்புமே' எனக் கூறுகிறார் இவர்.

### இணுவில்கோஷ்டி வென்றது

கோண்டாவில்,புதன்
இணுவில்தெரிவுக்கோஷ்டிக்கும் சுன்னாகம் பொலிஸ் கோஷ்டிக்கும்இடையேஇணுவில் சந்தை மைதானத்தில் சிநேகபூர்வமாக நடைபெற்றகைப்பந்தாட்டப் போட்டியில், இணுவில் தெரிவுக் கோஷ்டி முறையே15-8, 15-11,14-15 புள்ளிகளால் பொலிஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.இப் போட்டியை சுன்னாகம் பொலிஸ் அதிகாரியும்,உடுவில் கிராம சபைத்தலைவரும் ஆரம்பித்து வைத்தனர்.

### ஸ்கந்தா வெற்றி

கோண்டாவில்,புதன்
கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும்,ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான. கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரியை இனிங்சால் தோற்கடித்தது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டைகள்:
வெள்ளை முட்டை -/18 சதம். சிகப்பு முட்டை -/20 சதம். வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு. அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1632

சேவல் குஞ்சுகள்:
1நாள், 1கிழமை, 1மாதம் 2மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

ஸ்ருடியோ
யாழ்ப்பாண நகர மத்தியில் சகல படப்பிடிப்புக் கருவிகளையும்கொண்ட ஸ்ருடியோ ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கா. யோகநாதன், 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1650

மோட்டார் சைக்கிள்:
மிக நல்ல நிலைமையிலுள்ள ஒன்று ஸ்ரீ ரைகர் 100 றைம் மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. விலாசம் 'சரஸ்வதி வாசம்' தாவடி.
1644

### தேவை

தையல் ஆசிரியர்-மாணவிகள்:
நன்றாக பூவேலைகள் [மெசின் எம்ரோடரி] சிறுபிள்ளைகளின் றெடிமெற் முதலியன தைக்கத்தெரிந்த ஆசிரியர்கள், மாணவிகள் தேவை. விண்ணப்பிக்கவும். அட்வெட்டிசர் 72/2 றெயில்வே ஈஸ்லேன் கந்தர் மடம் யாழ்ப்பாணம். 1651

### கல்வி

வகுப்புக்கள்:
வர்த்தகம், கலை, விஞ்ஞான, தையல் சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் சாதாரணமாகக் காலை மாலையிலும், போயா,போயாவிற்கு முந்திய நாட்களில் பிரத்தியேகமாகவும் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். பெண்கள் வர்த்தகக் கல்லூரி [ஸ்தாபிதம் 1924] நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை. 1649

### விற்பனைக்கு

கைத்தறி ஆடைகள்:
பரந்தன், கிளிநொச்சி, கண்டாவளை, இராமநாதபுரம், தர்மபுரம் மக்கள் முரசுமோட்டையில் 107/1, நாராயணசாமி அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இதே ஆடைகள் முரசுமோட்டை சங்கக்கடையிலும், யாழ்ப்பாணத்தில் ஆறுமுகம் டெக்ஸ் டைல்ஸ், 20, பெரியகடை என்ற விலாசத்திலும் கிடைக்கும். 1648

மாடு:
'ராப்கார்' இன 3 வயது காளை நாம்பனும், 1 1/2 வயது சிந்து நாம்பனும், பசுமாடுகளும், கன்றுகளும் மொத்தம் 20 உருப்படி விற்பனைக்கு உண்டு. தனித்தும், ஒருமித்தும் கொடுக்கப்படும். தேவையானோர் 23-3-67 தொடக்கம் 26-3-67 வரைக்கும் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். சூ.அருளானந்தம், 'கராஜ்' முல்லைத்தீவு. 1647

### திருமண அழைப்பு

நிகழும் பங்குனி மாதம் 25-3-67 சனிக்கிழமைஇரவு 1-46 தொடக்கம்3-55வரை வரும் சுபமுகூர்த்தத்தில் சுண்டிக்குழி ஆயுள்வேத வைத்தியர் வே. அப்பாத்துரை தம்பதிகளின் புத்திரி செல்வி சிவயோகத்துக்கும் கடுக்காய்வீதி க. தம்பிராசா தம்பதிகளின் புத்திரன் செல்வன் செல்வராசாவுக்கும் பழம்ரோட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள்நிச்சயித்திருப்பதால்அத்தருணம் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இங்ஙனம் தங்கள்நல்வரவை நாடும் அ. கந்தசாமியும் பாரியாரும், [சிங்கர் மெசின் கொம்பனி] ஆனந்தவாசம் காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1652

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விலாச மாற்றம்

### தேசிய லொத்தர் சபையின்

புதிய காரியாலயம்
27-3-67 தொடக்கம்

**இல. 502/1, காலி ரேட், கொள்ளுப்பிட்டி**

என்னும் விலாசத்திலிருந்து இயங்கும்.

எரிக் டி சில்வா,
ஜெனரல் மனேஜர்,
தேசிய லொத்தர் சபை.

தொலைபேசி: 7631

ராதா மணி மார்க்

## சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனல் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

**எங்கும் கிடைக்கும்**

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

கிடைக்குமிடங்கள்:
**வே. சி. கணபதிப்பிள்ளை அன் பிறதர்,** ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
**ரி. செல்லத்துரை,** மூளாய் ரோட், வட்டுக்கோட்டை.
**க. நல்லதம்பி,** மூளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் காய்கறி விலை திடீர் வீழ்ச்சி

## கத்தரிக்காய் 15 சதம், கோவா 25 சதம், முருங்கைக்காய் 10 சதம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் காய்கறிகளின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் வரை மிகவும் கூடுதலான விலையில் விற்பனையான முக்கியமான காய் கறிகள் யாழ்ப்பாணத்திலுள்ள பல சந்தைகளிலும் இப்பொழுது மிகவும் குறைவான விலைக்குப் பெறக்கூடியதாகவிருக்கிறது, இதன் எதிரொலியாக சந்தைகளில் இப்பொழுது பெரும் கூட்டம் காணப்படுகிறது.

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் காய்கறிகள் மிகவும் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு வாரகாலத்துக்கு முன்னர் ஒரு றுத்தல் அறுபது சதம் வீதம் விற்பனையான கோவா இப்பொழுது றுத்தல் இருபத்தைந்து சதத்துக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. இதே போல றுத்தல் அறுபது சதத்துக்கு இங்கு விற்பனையான பச்சை மிளகாய் இப்பொழுது இருபத்தைந்து சதத்துக்கும், நாற்பது சதத்துக்கு விற்பனையான கத்தரிக்காய் பத்து சதத்துக்கும், முப்பது சதத்துக்கு விற்பனையான தரமான முருங்கைக்காய் பத்துச் சதத்துக்கும் இப்பொழுது கிடைக்கக்கூடியதாகவிருக்கிறது.

யாழ்ப்பாணம் சந்தையிலிருந் சுமார் 2 மைல் தூரத்திலுள்ள திருநெல்வேலி சந்தையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள சுன்னாகம்சந்தையிலும் மிகவும் குறைந்த விலையில் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. நேற்று ஒரு றுத்தல் தரமான கத்தரிக்காய் பதின்மூன்று சதத்துக்கும் கோவா இருபது சதத்துக்கும் பச்சை மிளகாய் இருபத்தைந்து சதத்துக்கும் தரமான முருங்கைக்காய் பத்துச் சதத்துக்கும் கிடைக்கக்கூடியதாக விருந்தன.

### விவசாயிகள் கவலை

காய்கறிகளின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது, தங்களை மிகவும் பாதித்து விட்டதாகவிவசாயிகள்சிலர் நமது நிருபரிடம் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இப்படியான விலையில் தாங்கள் இங்கு காய்சறிகள் கடந்த பல மாதங்களில் வாங்கியது கிடையாது என்று பாவனையாளர்கள் சிலர் நமது நிருபரிடம்தெரிவித்துள்ளனர்.


நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

விஜயா—முத்துராமன் நடித்த

பஞ்சவர்ணக் கிளி


## இடமாற்றத்தை ரத்து செய்யக் கோரிக்கை

சங்கானை, புதன்

சங்கானை பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி மென்டிஸின் திடீர் இடமாற்றம் சங்கானை டட்டினசபையின் முன்னேற்றத்தைப் பாதிப்பதுடன், பொதுமக்களின் நலனும் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை என்றும், அவருடைய இடமாற்றத்தை ரத்துசெய்து தொடர்ந்தும் அவரை குறிப்பிட்ட பகுதியில் கடமையாற்ற சில ஆண்டுகளாவது அனுமதிர்கவேண்டும். எனவும்கேரரிசங்கரனைப்பட்டினசபைத் தலைவர் பொலிஸ்அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### வியாழன் 23-3-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 கிறிஸ்தவ பாடல்கள், 6-30 சிறுகதை 6-45 கிராம சஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8.15 திருக்குர் ஆன் விளக்கம், 8-45 சிந்தனை முத்துக்கள் [மறு ஒலிபரப்பு]. 9-30 கதம்பம்.

# 'நிலவரி ரத்து பற்றி பரிசீலனை செய்யப்படும்'

## அண்ணா அறிவிப்பு

சென்னை, மார்ச் 22

நிலவரி ரத்து பற்றிய இறுதி முடிவை எடுப்பதற்கு முன் அதன் எல்லா அம்சங்களும் பரிசிலனை செய்யப்படுமென தமிழ்நாட்டு முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை கூறியுள்ளார். நேற்று மாலை சென்னை அரசாங்கத்தின் 1967—68ம் வருஷத்துக்கான இடைக்கால பட்ஜெட் மீதான விவாதம் ராஜ்ய மேல்சபையில் நடைபெற்றபோது, விவாதத்துக்குப் பதிலளிக்கையிலேயே முதல்மந்திரி மேற்கண்டவாறு கூறினர்.

நிலவரி ஒழிப்பில் எல்லா நிலச்சுவாந்தார்களையும் அடக்குவதா அல்லது சிறு நிலச்சுவாந்தர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதா என்பதுபற்றி ஆராயப்படுமென்றும், நிலவரி ரத்தினுல் ஏற்படக்கூடிய நஷ்டத்தைச் சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் ஆலோசிக்கப்படுமென்றும் முதல் மந்திரி மேலும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

சேலத்தில் எஃகு தொழிற்சாலை நிறுவுதல், தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் நிறுவுதல் ஆகியன பற்றித் தமது அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென திரு. சி. என். அண்ணாதுரை கூறினர்.

தி. மு. க. தனது தேர்தல் உறுதிமொழிகளை நிறைவேற்றத் தன்னாலானதைச் செய்யுமென்றும், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் இருக்குமேயானல், அவைபற்றி மக்களுடன் கலந்தாலோசிக்கக் கருத்துக் கலப்பு ஏற்படுத்தத் தாம் எண்ணியுள்ளதாகவும் முதல்மந்திரி தெரிவித்தார்.

## கொலையா? தற்கொலையா?

யாழ்ப்பாணம், வியாழன்

''காலஞ்சென்ற எனது சகோதரரான செல்வராசா கடன் தொல்லை தாங்காது தற்கொலை செய்திருக்கலாம் அல்லது அவருக்குக் கடன் கொடுத்தவர்கள் அவரைக் கொலை செய்திருக்கலாம். அவரது மரணம் எவ்விதம் நடந்திருக்கும் என என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்று நேற்றுக் காலை இறந்து கிடந்த யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த பொன்னையா செல்வராஜா விக்டோரியா [34 வயது] என்பவரது மரணம் சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் நடத்திய விசாரணையில் காலஞ்சென்றவரது சகோதரரான செபஸ்தியான் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், காலஞ்சென்றவரது வயிற்றுக்குள் நச்சுத்திராவகம் இருந்ததாகவும், அது என்ன என சரியாக கூற முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார். உடல் உள்ளுறுப்புகள் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இம்மரணத்துக்கான தீர்ப்பு வழங்குவதை மரணவிசாரணை அதிகாரி ஒத்திவைத்தார். [ந. நி.]

### மலேசிய.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. அமிர்தலிங்கம், உலக தமிழ்ஆராய்ச்சி மகாநாட்டில்கலந்துகொள்ள மலேயா சென்றபோது மலேசிய பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முள்ளியவளை

## மாணவர்களின் சுற்றுலா

யாழ்ப்பாணம், வியா.

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியைச் சேர்ந்த 40 மாணவர்கள் மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளையும் சென்று பார்வையிட்ட பின்னர் இன்று முள்ளியவளை திரும்புகின்றனர். கல்லூரி அதிபர் திரு. வ. பொன்னம்பலம் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் தலைமையில், இம் மாணவர்கள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், ஊர்காவற்றுறை கடற்கோட்டை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, கீரிமலை, மற்றும் பாடசாலைகள், கோவில்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்குச் சென்றிருந்தனர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 17-ந் திருவிழாவான இன்று மாலை 5 மணிக்கு ஸ்ரீ பிச்சாண்டவர் உற்சவம் நடைபெறும். பின்னர் மாலை 6 மணி முதல் இரவு 7-30 வரை திருஞானசம்பந்தர் கதாப் பிரசங்கத் தொடர் நடைபெறும். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜை நடைபெறும்.

### யாழ். மாநகரசபை-. .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

க்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

மார்ட்டின் கமிஷன் அறிக்கை. புதிதாகத் தெரிவு செய்யப்படவிருக்கும் மாநகரசபையில் புனராலோசனை செய்யப்படுமென்றும், வட்டார பிரிவினைகளில் உள்ள குறைபாடுகள்பற்றி புதிய அங்கத்தவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க சந்தர்ப்பமளிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]

விஜயா [மட்டக்களப்பு] மொடேர்ன் [பண்டாரவளை] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]

நியூசினிமா [குருநாகல்] சந்தியா [கம்பொலை] பிறின்ஸ் [காலி]

மொடேர்ன் தியேட்டர்ஸாரின் 101-வது தயாரிப்பு

ஜெய்சங்கர், எல். விஜயலக்ஷ்மி, மனோகர், அசோகன், தங்கவேலு, மனோரமா, வசந்தா, கருணாநிதி

மற்றும் பலர் நடித்த

இரு வல்லவர்கள்

கிங்ஸ்லி [கொழும்பு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி

எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா

மற்றும் பலர் நடிக்கும்

தாயின் மடியில்



REGAL - JAFFNA

Daily at 4-45, 7-00 9-45

Anthony Quinn

Silvana Mangano

in

Columbia's

BARABBAS



ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA

தினசரி 2-30, 6-30, 9-45

போயாதினங்களில் 4காட்சிகள்

சிவாஜி—பானுமதி நடித்த

தென்னலிராமன்



மனோஹரா

[யாழ்ப்பாணம்]

Daily at 4-45, 7-00, 9-45

Secret agent 008

OPERATION EXTERMINATION

[Technicolor]


## மரண அறிவித்தல்

### ஜெயலட்சுமி அம்மாள்

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் ஆதீனக் குருக்கள் பிரம்மஸ்ரீ குருசாமிக்குருக்கள் அவர்களின் அருமை மனைவியும், நல்லூர் கந்தசுவாமி கோவில் குருக்கள் ஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் அவர்களின் அருமைத் தாயாரும், நியாயசிரோமணி. சி. சுப்பிரமணியன், சி. பரமேஸ்வரன், சு. பசுபதீஸ்வர சர்மா ஆகியோரின் அருமை மாமியாருமான ஜெயலட்சுமி அம்மாள் நேற்று இரவு 7-30 மணிக்கு சிவபதமடைந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 343, நாவலர் வீதியில் நடைபெற்று இன்று மாலை 3 மணிக்கு செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 1079

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org